# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),
*************

முறையீட்டு மனு எண்: 209 /மா/2017
ஆணை எண்: 267/2017
நாள்: 29/11/2017

திருமதி. ஏ. கொன்ராத்ராணி (எ) ஏ.சரஸ்வதி,
தஞ்சாவூர். - முறையீட்டு மனுதாரர்

ஆணையாளர்,
தஞ்சாவூர் மாநகராட்சி. - எதிர்மனுதாரர்

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி, மாதாக்கோட்டை ரோடு, மூவேந்தர் நகர், 15 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. ஏ. கொன்ராத்ராணி என்ற ஏ.சரஸ்வதி என்பவரின் 30.10.2017 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 02.11.2017 அன்று பெறப்பட்டு 209/மா/2017 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது முறையீட்டு மனுதாரரின் மனு பரிசீலிக்கப்பட்டு, கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

தஞ்சாவூர் மாவட்டம், தஞ்சாவூர் மாநகராட்சி, மாதாக்கோட்டை ரோடு, மூவேந்தர் நகர், 15 எண்ணிட்ட முகவரியில் வசிக்கும் திருமதி. ஏ. கொன்ராத்ராணி என்ற ஏ.சரஸ்வதி என்பவர் தான் தஞ்சாவூர் நகராட்சியில் நகர சுகாதார செவிலியராகப் பணிபுரிந்து 28.02.2015 அன்று வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்றதாகவும், தனக்கு வரவேண்டிய சேமநலநிதித் தொகை ரூ.2,09,435/-ஐ காசோலையாகப் பெற்றுக் கொண்டதாகவும், சேமநலநிதிக்கு (Provident Fund) வட்டி கோரி தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு 12.10.2015 அன்று விண்ணப்பித்ததாகவும் ஆனால் வட்டித் தொகை தனக்கு இன்னமும் கிடைக்கவில்லை என்றும் இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார். மனுதாரரின் முறையீடு குறித்து தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையரின் 16.11.2017 நாளிட்ட அறிக்கை பெறப்பட்டது. தஞ்சாவூர் மாநகராட்சியில் சுகாதாரப் பிரிவு மற்றும்

பொதுப் பிரிவில் பணிபுரியும் பணியாளர்களின் சேமநலநிதி வட்டித் தொகை 2002-2003 முதல் 2015-2016 ஆண்டுவரை கணக்கிடப்பட்டு, உதவி இயக்குநர் உள்ளாட்சி நிதித் தணிக்கை துறைக்கு கணக்கினைச் சரிபார்த்து அரசுக்கு சான்று வழங்கிட அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும், அரசிடமிருந்து வட்டித் தொகை மாநகராட்சிக்கு வரப்பெற்ற உடன் மனுதாரருக்கு சேமநலநிதி வட்டி வழங்கப்படும் என்று தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளதை இம்முறைமன்ற நடுவம் கருத்தில் கொண்டு, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையினர் அரசுக்கு விரைந்து அறிக்கை அனுப்பி வைப்பதற்கு தொடர் நடவடிக்கை எடுத்தும் சேமநலநிதி வட்டித்தொகை ஒதுக்கீடு பெற்றும் மனுதாரருக்கு வழங்குவதை உறுதி செய்யுமாறு தஞ்சாவூர் மாநகராட்சி ஆணையருக்கு அறிவுறுத்தி இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

2017 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிட்டு இவ்வாணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்**

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 1124

பெறுநர்

1. திருமதி. ஏ. கொன்ராத்ராணி (எ) ஏ. சரஸ்வதி,
   15, மூவேந்தர் நகர், மாதாக்கோட்டை ரோடு,
   தஞ்சாவூர்.

2. ஆணையர்,
   தஞ்சாவூர் மாநகராட்சி,
   தஞ்சாவூர்.

**நகல்:**

முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பேரூராட்சி பிரிவு – 3
இகோ / உதிரி -3.